

# எல்லை காக்கும்
# வீரமாகாளியம்மன்

(சரித்திர—கற்பனை நாடகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லைகாக்கும்
# வீரமாகாளியம்மன்
(சரித்திர-கற்பனை நாடகம்)

நாடக எழுத்தாக்கம்:
## எஸ்.ஏ.ஸ்ரீதர்

களப்பின்னணி குறிப்புக்கள்:
அமரர்.மு.திருச்செல்வம் - எழுதிய
'ஈழத்தமிழர் இறைமை' நூல்

வெளியீடு:
## இலக்கியச் சிந்தனை
8ம் குறுக்குத்தெரு,
கருணைபுரம்,
வாழைச்சேனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

A.SRIDHAR

# போருக்கு முன்

"1619ஜூன் 5ம் திகதி ஈழத்தமிழினம் போர்த்துக்கேயரிடம் அடிபணிந்தது....." ஏதோவொரு நூலில் நான் படித்த வரலாற்றுத் தகவல் இது. எவ்வளவு சுலபமாக சொல்ல முடிகிறது தமிழினம் அடிமைப்பட்டு விட்டது என்று!.

இந்த அடிமைத் தளையிலிருந்து விடுபட தமிழினத்தின் தன்மான வீரர்கள் அடிக்கடி தலையெடுத்தனர். ஏதோ களையெடுப்பது போல் அவர்களை அடக்க முயன்றது. கடந்த காலங்களில் ஈழத்தை ஆண்டு வந்த, ஆண்டு வரும், ஆளும் வர்க்கம். அது இன்று வரை தொடர்வது எமது துர்ப்பாக்கியம். "ஈழம்" தமிழர்களின் தேசிய சொத்து. இதனை எந்த வரலாற்றாய்வாளனாலும் மறுக்க முடியாது. தமிழர்கள் இதனை மறுக்கவும் கூடாது. அதை மீண்டுமொரு முறை உறுதிப்படுத்தவே இந்நூல்.

நமது இளைஞர்கள் சினிமாவுக்கும், கிரிக்கட்டுக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தை நமது இன, மத, மொழி நலனுக்கு கொடுப்பதில்லை என்றொரு குறைபாடு இன்று நிலவி வருகிறது.

இந்நிலை எதனால் ஏற்பட்டதென்று ஒருகணம் யாவரும் சிந்தித்தாக வேண்டும். திட்டமிட்டோ அல்லது சந்தர்ப்ப வசத்தாலோ எமது பெரும்பான்மையான தமிழ் இளைஞர்களுக்கு நமது மொழி இன பாரம்பரியத்தை உணர்ந்து கொள்ளும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு விட்டன. இல்லை...இல்லை... மறைக்கப்பட்டு விட்டன.

இந்நிலை மாறவேண்டும். மாறுமா?.............

இனி போருக்குச் செல்வோமா?

*அன்புடன்*
*ஆசிரியன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களப்பின்னணி

ஆரியச்சக்கரவர்த்திகள் பரம்பரையைச் சேர்ந்த கடைசி மன்னன் தான் சங்கிலி. 1619 ஜூனில் தமிழ் ஈழத்தின் இறைமையையும் ஆட்சியுரிமையையும் தனது கடைசி மூச்சுவரை விட்டுக்கொடுக்க முடியாது என்றான் இந்த மன்னன். தமிழ் மக்களின் இறைமையும் ஆட்சியுரிமையும் இடையீடின்றித் தமிழ் மன்னர்களால் அனுபவிக்கப்பட்டதை சங்கிலி மன்னன் உணர்ந்திருந்தான்.

தமிழீழ அரசை எதிர்த்து உள்நாட்டில் கலகம் நடைபெற்றது. 1618 ஆவணி - புரட்டாதி மாதங்களில் இந்தக்கலகம் நடைபெற்றது. சங்கிலி மன்னன் அப்போது தமிழ் ஈழத்தின் தன்னிகரற்ற மன்னனாக ஆட்சி செய்தான்.

போர்த்துக்கேயப் பாதிரியார் பீதுறு பொட்டன்கொன் தலைமையில் கலகம் நடைபெற்றது. தமிழ் ஈழ அரசைக் கவிழ்க்க வேண்டும். போர்த்துக்கேயரின் ஆட்சி அங்கு நிறுவப்பட வேண்டும். இதுதான் கலகக்காரரின் நோக்கம். மன்னாரில் படைகளுடன் இருந்த போர்த்துக்கேயர்கள் இதற்கு மறைமுக ஆதரவு தந்தனர்.

# முதலாம் காட்சி

**இடம்: சங்கிலி மன்னனது அரசவை. மந்திரி பிரதானிகள் ஆசனங்களில் அமர்ந்திருக்கின்றனர். காவலன் அவைக்கு வருகிறான்.**

**காவலன்:** " ஆரியச்சக்கரவர்த்தி ஈழத்தின் தன்னிகரற்ற வேந்தர் சங்கிலி மன்னர் அரசவைக்கு வருகிறான்." (சங்கிலி இரு காவலாளிகள் சூழ்ந்து வர அவைக்கு வருகிறான். மன்னனைக் கண்டதும் அனைவரும் எழுந்து தலைவணங்கி நிற்கின்றனர். அவர்களது வணக்கத்தை ஏற்று ஆசனத்தில் சங்கிலி அமர்ந்தபின் ஏனையோரும் அமர்கின்றனர்.)

**சங்கிலி:** "மந்திரியாரே! நாம் இந்த அவையை கூட்டியதன் காரணத்தை அனைவருக்கும் தெரியத்தரலாமே...."
(மந்திரி ஆசனத்திலிருந்து எழுகிறார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மந்திரி:** "ஆம் மன்னா இது பற்றி நம் பிரதானிகள் அறிந்திருப்பர் என எண்ணுகிறேன். கடந்த இரு மாதங்களாக நம் தேசத்தில் அதிகமான கலகங்கள் ஏற்பட்டுள்ளன. பறங்கிப் பாதிரிமாரின் தலைமையில் நடக்கும் இந்தக் கலகங்களில் நமது தமிழ் முதலியார்களும் இடம்பெற்றுள்ளனர். இதற்கு உடனடியாக ஓர் முடிவு காண வேண்டும். இல்லையாயின் நமது நகரின் அமைதி கெட்டுவிடும். இது பற்றி கலந்தாலோசிக்கவே இந்த அரசவை அவசரமாக கூட்டப்பட்டிருக்கிறது. (மந்திரி அமர்கிறார்)

**பிரதானி ஒருவர்:** " இதில் ஆலோசிப்பதற்கு எதுவுமில்லை மன்னா உடனடியாக நம் படைகளை அனுப்பி கலகக்காரரை சிறைப்பிடித்து கலகத்தை உடன் நிறுத்த வேண்டும்."

**சங்கிலி:** தாங்கள் கூறுவது போல் படைகளை அனுப்பி கலகத்தை அடக்கியிருக்கலாம். ஆனால் நாம் அவ்வாறு செய்தால் கலகக்காரரின் நோக்கம் வெற்றி பெற்று விடும்."

**மந்திரி:** "என்ன சொல்கிறீர்கள் மன்னா?...."

**சங்கிலி:** "புரியவில்லையா மந்திரியாரே!
கலகத்துக்கு தலைமை தாங்கியிருப்பவர் பாதிரியார் பீதுறு பொட்டன் கொன் என்பவர், படைகளை அனுப்பினால் பாதிரியாரையும் கைது செய்ய நேரிடும். அதனை காரணமாக வைத்தே பறங்கிப் படைகள் நம் நகரினுள் நுழைந்து விடும்"

**மந்திரி:** (தலையசைத்து ஆமோதித்து விட்டு)
"ஆம் மன்னா.... அவ்வாறொரு படையெடுப்பு நிகழுமானால் நம்மால் எதுவும் செய்ய முடியாது. நம்மிடம் இப்போது இருக்கும் படைகள் போதுமானதாக இல்லை"

**சங்கிலி:** " அதனால் தான் நானொரு தீர்மானத்திற்கு வந்திருக்கிறேன். நமது காத்தவராயரை அனுப்பி தஞ்சை மன்னரிடம் உதவி கோரலாமென்று நீங்கள் இதற்கு என்ன சொல்கிறீர்கள்?."

**மந்திரி:** "மன்னா தங்களது முடிவே சிறந்த முடிவு. அவ்வாறே செய்வோம்."
(காவலன் உள்ளே வந்து தலைவணங்குகிறான்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலன்: "மன்னா! தங்களது கட்டளைக்காக காத்தவராயர் காத்திருக்கிறார்." (சற்றுத் தலைமயிர் நரைத்த காத்தவராயர் உள்ளே வந்து அரசனுக்கு தலைவணங்கி நின்றார்.)

சங்கிலி: "வாருங்கள் காத்தவராயரே! நாம் முன்னர் கூறியது போன்று நீங்கள் உடனடியாக நமது வீரர்களில் சிலரை அழைத்துக்கொண்டு தஞ்சைக்கு செல்லுங்கள்."

காத்தவராயர்: (தலைவணங்கிய படி)
" தங்களது உத்தரவுப்படியே நடக்கிறேன் மன்னா"

திரை மூடுகிறது.

...

# களப்பின்னணி

தஞ்சை ரகுசாத நாயக்க மன்னன், வர்ணகுலத்தானையும், ஐயாயிரம் வீரர்களையும் அனுப்பினான். சங்கிலி கலகத்தை இலகுவில் அடக்கினான். சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரின் தொல்லைகளை அறிவான். வாய்ப்புக்கிடைத்தால் சம்புமல்குமரயா போன்றவர்களை அனுப்பி தமிழ் ஈழ அரசை அடக்கி ஆளச்சிங்கள அரசர்கள் கூட முயல்வார்கள் என்பதையும் சங்கிலி மன்னன் அறிவான்.

"யாழ்ப்பாணத்தைத் தலைநகராகக் கொண்ட தமிழ்ஈழ அரசைக் கைப்பற்றுக" என்ற ஆணையை 1617இல் கோவாவில் இருந்த தனது இந்திய ஆளுனருக்குப் போர்த்துக்கேய மன்னன் அனுப்பிருந்தான். அந்த ஆணையை நடைமுறைப்படுத்தும் வாய்ப்பை எதிர்நோக்கி இருந்தனர். இந்தியாவிலும், இலங்கையிலும் உள்ள படைத்தளபதிகள். 1619 ஜனவரி வரை அந்த ஆணையை நிறைவேற்றக்கூடிய சூழ்நிலையைத் தமிழ் ஈழமன்னன் போர்த்துக்கேயருக்கு விட்டு வைக்கவில்லை.

தமிழ் ஈழ அரசுக்கும், அகன்ற போர்த்துக்கேய அரசுக்கும் போர்கள் நடந்தது உண்டு. போர்களில் மாறி மாறி இரு அரசுகளும் வெற்றியீட்டியுள்ளன. திறைப் பணம் கொடுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு தமிழ் ஈழ அரசு போர்த்துக்கேய அரசிடம் சரணாகதி அடையவில்லை, அடிமைப்படவில்லை.

இரு ஆண்டுகளாக சங்கிலி மன்னன் போர்த்துக்கேயருக்கு எதுவும் கொடுக்கவில்லை. வலுக்கட்டாயமாகச் சன்மானம் கொடுப்பது கூட சங்கிலி மன்னனின் தன்மான உணர்வுக்கு ஒப்புவதாக இல்லை. எதுவும் பெறாத நிலையில் திறையைக் கேட்டு எழுதினான் போர்த்துக்கேயன். போர்த்துக்கேயர் போருக்கு மீண்டும் தயாராவதை சங்கிலி மன்னன் உணர்ந்தான். திறை கேட்டு எழுதிய ஓலைக்குச் சங்கிலி மன்னன் பதில் அனுப்பவில்லை.

போர்த்துக்கேயரை தமிழ் ஈழத்திலிருந்து விரட்ட சங்கிலி மன்னன் இரண்டு வழிகளை தேர்ந்தெடுத்தான். ஒல்லாந்தர் மேலை நாட்டவர் சிறிது சிறிதாகக் கீழை நாடுகளில் காலடி எடுத்து வைக்க முனைகின்றவர். தமிழ் நாட்டில் பழவேற்காட்டில் ஒல்லாந்தர் படையும் பாசறையுமாக இருந்தனர். இவர்கள் போர்த்துக்கேயரின் செல்வாக்கைப் போக்க விரும்பினர். அவர்களிடம் போர்த்துக்கேயரை தாக்கி முறியடிக்கக்கூடிய கப்பற்படை இருந்தது. ஆயுதங்கள் இருந்தன. சென்னைப் பட்டினத்துக்கு வடக்கேயுள்ள பழவேற்காட்டுப் பாசறையிலுள்ள ஒல்லாந்தருக்கு சங்கிலி மன்னன் செய்தி அனுப்பினான்.

அடுத்து குஞ்சலி வீரர்களில் சிறந்த போர்வீரனாகவும், போர்த்துக்கேயரால் மதம் மாற்றப்பட்டு அவர்களது சிறையிலிருந்து தப்பியோடி தனக்கென ஒரு கப்பற்படையை அமைத்துக்கொண்டு ஆறேழு கப்பல்களுடனும், வீரர்களுடனும் போர்த்துக்கேயருக்கு தொல்லை கொடுப்பவனாகவும் விளங்கிய, இந்தியாவில் மேற்குக் கரையோர மலையாளப் பட்டினத்திலிருந்த கோழிக்கோட்டைச் சேர்ந்த டொம் பீதுறு டொட்றிகசுக்குச் செய்தி அனுப்பினான்.

# இரண்டாம் காட்சி

**இடம்: மன்னாரில் போத்துக்கேயர் பாசறையில் தளபதி ஒலிவேரா, உபதளபதி தெயிக்சேறா, காக்கை வன்னியன் மற்றும் சில தமிழ் முதலியார்கள் அமர்ந்து இருக்கின்றனர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**காக்கைவன்னியன்:** " கப்பித்தான் மேஜர் அவர்களே! நீங்கள் இனியும் தாமதிப்பது நல்லதல்ல. உடனடியாக படைகளைக் கொண்டு யாழ்பாணத்தை கைப்பற்றியாக வேண்டும். இல்லையானால் அந்தச் சங்கிலி எல்லை மீறிப்போய்விடுவான்."

**ஒலிவேரா:** "கோபப்படாதீர் காக்கை காக்கை வன்னியரே! யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுமாறு எங்களுக்கும் உத்தரவு வந்திருக்கிறது. அதுக்கான நேரம் பார்த்துக் காத்திருந்தோம். அதை சங்கிலியே இப்போது உருவாக்கிட்டான்."

**காக்கை:** "என்ன சொல்கிறீர்கள் மேஜர்?"

**தெயிக்சேறா:** ஆமாம்! நமது திட்டப்படி நடந்த கலகம் தஞ்சைப் படையால் அடக்கப்பட்டு விட்டது. அது மட்டுமல்ல அந்த தஞ்சைப் படைத்தலைவன் வருணகுலத்தான் நமது படையினரில் நிறையப் பேரை கைது செய்திருக்கிறான்.

**ஓலிவேரா:** " ஆனால் அதையெல்லாம் விட நமக்கு கோபத்தை அளிக்கக்கூடிய காரியங்கள் இரண்டினை சங்கிலி மன்னன் செய்திருக்கிறான்."

**காக்கை:** இரண்டு காரியங்களா?

**ஒலிவேரா:** "ஆம்! இந்தியாவில் இருந்துகிட்டு நம் படைகளை தொல்லைப்படுத்திட்டு இருக்கிற டொம் பீதுறுவுக்கு செய்தி அனுப்பிருக்கான். அது மட்டுமில்ல பழவேற்காட்டில் இருக்கிற டச்சுக்காரங்ககிட்ட உதவி கேட்டு தூது அனுப்பியிருக்கான். அவர்கள் இவரது உதவியும் கிடைத்து விட்டால் நம்மால் சங்கிலியை நெருங்க முடியாது."

**காக்கை:** புது சங்கதியாய் இருக்கிறது மேஜர் இது உங்களுக்கு எப்படித் தெரிந்தது.

**ஒலிவேரா:** என்ன வன்னியரே! நீங்கள் இப்படிக் கேட்கின்றீர்கள். உங்களில் சொந்த இனத்துக்கு குழி தோண்டுகிறவர்கள் நிறைய இருக்கிறார்கள். உங்கள் ஈழத்தில் நீங்கள் இருக்கும் வரை ஈழமென்ன எதை வேண்டுமானாலும் நாங்கள் கைப்பற்றுவோம்.

**காக்கை:** அப்படியானால் படை எப்போது புறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெயிக்சேறா: கொழும்பிலிருந்து கடல் வழியாக ஒரு படை மன்னாரை நோக்கி ஆறு கப்பல்களில் புறப்பட்டு விட்டது. இனி நாமும் நமது படைகளை அழைத்துக்கொண்டு புத்தளம் வழியாக புறப்பட வேண்டம்.

ஒலிவேரா: நமது படைகள் இன்றே புறப்படட்டும்.

ஆ......வன்னியரே! உங்களுடைய உதவி எமக்கு எப்போதும் தேவை. இந்த போர் முடிந்ததும் நீங்கள் கேட்பதை நாங்கள் கொடுக்கிறோம்.

**காக்கை:** "என் உதவி உங்களுக்கு எப்போதும் கிடைக்கும் மேஜர்! எனக்கு பெரிய ஆசை எதுவும் கிடையாது. சங்கிலியை ஒழித்ததன் பின் யாழ்ப்பாணத்திற்கு என்னையே மன்னனாக்கி விடுங்கள்"

(திரை மூடுகிறது)

....

# களப்பின்னணி

1619 மார்ச் மாதத்தில் டொம் பீதுறு ஆறு கப்பல்களில் மலையாளப்படைகளை அழைத்துக்கொண்டு யாழ்ப்பாணக் கடற்கரைக்கு வந்து சங்கிலி மன்னனின் ஆணையை எதிர்பார்த்து யாழ்ப்பாணத்தை ஒட்டிய கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்றான். டொம் பீதுறுவின் கடற்படை யாழ்ப்பாண கரையோரங்களில் காணப்பட்டதும் பாதிரிமார் உடனடியாகக் கொழும்புக்குச் செய்தி அனுப்பினர். 1619 மார்ச்சில் கொழும்பில் தளபதியாக இருந்தவன் கொன்சுடான்டின் டி சா இவன் சங்கிலியின் படைப்பெருக்க நடவடிக்கைகளை உன்னிப்பாக கவனித்தான். டொம் பீதுறுவின் கடற்படை வருகை மேலும் கோபத்தை ஊட்டியது.

1619 பங்குனியிலே இரு படைத்தொகுதிகளை யாழ்ப்பாணத்திற்கு புறப்பட கட்டளையிட்டான். கடல் வழியாக 100 போர்த்துக்கேய வீரர்களும் சில நூறு சிங்களக் கூலிப்படைகளும் ஆறு கப்பல்களில் மன்னாரை நோக்கிப் புறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிலிப் டி ஒலிவேரா தலைமையில் 130 போர்த்துக்கேயரும் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட சிங்களக் கூலிப்படைகளும் கரையோரப் பாதையால் புத்தளம் - சிலாபம் - முள்ளிக்குளப் பாதையால் யாழ்ப்பாணத்தை நோக்கிப் புறப்பட்டன. இதை தவிர நாகபட்டினத்தில் உள்ள போர்த்துக்கேயருக்கு கடற்படைக் கப்பல்களையும் படைகளையும் அனுப்புமாறு தளபதி டிசா செய்தி அனுப்பியிருந்தான்.

போர்த்துக்கேயரின் போர் நடவடிக்கைகளை சங்கிலி மன்னன் ஒற்றர் மூலம் உடனுக்குடன் தெரிந்து கொண்டான். டொம் பீதுறுவின் வருகை தான் போர்த்துக்கேயரைக் கோபத்துக்குள்ளாக்கி உடன் நடவடிக்கைக்கு வழி செய்தமையைத் தெரிந்து கொண்டான். டொம் பீதுறுவுக்குச் சங்கிலி மன்னன் செய்தி அனுப்பி அரசவைக்கு அழைத்தான். யாழ்ப்பாணக் கடலில் நில்லாது எட்டத்தள்ளி நிற்குமாறு கேட்டுக் கொண்டான். டொம் பீதுறு யாழ்ப்பாணக் கடலைவிட்டு நீங்கியமையால் போர்த்துக்கேய கடற்படைக்கு பணி குறைந்தது.

பிலிப் டி ஒலிவேரா தனது தரைப்படைகளுடன் புத்தளம்-மன்னார் வழியாக பூநகரியை வந்தடைந்தான். 1619 பங்குனியில் கொழும்பை விட்டுப் புறப்பட படைகள் 1619 வைகாசியில் தான் பூநகரியை வந்தடைந்தன. வழியில் படை வீரர்கள் நோய்வாய்ப்பட்டனர். வெயிற்காலம் ஆனதால் களைப்புற்றும் இருந்தனர். காட்டு வழியாதலால் பயணம் கடுமையானதாக இருந்தது. நவீன படை ஆயுதங்கள் இருந்தன. பீரங்கி வெடிகள், துப்பாக்கிகள், வாள், ஈட்டி என்பன மிகையாக இருந்தன.

தமிழ் ஈழ அரசர்கள் கூடத் துப்பாக்கிகளைப் பெற்று அவற்றைப் பயன்படுத்துவதில் வீரர்களை பயிற்றி இருந்தனர். வாட்படை, வேற்படை குதிரைப்படை, யானைப்படை, என்பன சங்கிலி மன்னனிடம் மிகையாக இருந்தன. வருணகுலத்தான் தலைமையில் உள்ள 5000 வீரர்களுடன் சங்கிலி மன்னனின் சில ஆயிரம் படை வீரர்கள் இருந்தனர்.

பூநகரில் இருந்து ஒலிவேரா சங்கிலி மன்னனுக்குச் செய்தி அனுப்பினான். "குடாக்கடலைத் தாண்ட வேண்டும். படைகள் குடாநாட்டுக்குள் வரவேண்டும் மன்னனின் ஓடங்களை அனுப்பி உதவுக" சங்கிலி மன்னன் பதில் அனுப்பவில்லை. ஓடங்களையோ, நாவாய்களையோ அனுப்பவில்லை. இவற்றை அனுப்ப இசையவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை வன்னியன் போன்ற துரோகிகள் உதவினார்கள். சில பாதிரிமார்கள் உதவினார்கள். அவர்கள் படகுகளையும், நாவாய்களையும் பூநகரிக்கு அனுப்பினார்கள். 1619 மே மாதக்கடைசியில் குடாநாட்டுக்குள் படைகள் வந்து சேர்ந்தன.

யாழ்பாணக் குடாநாடு பலவிதமான படை வீரர்களின் உலாக்களமாயிற்று. சங்கிலி மன்னனின் படைகள்- தஞ்சைப்படைகள் - போர்த்துக்கேயப்படைகள் - சிங்களக் கூலிப் படைகள் எனப்பலவகை வீரர்கள் அங்கு இருந்தனர்.

# மூன்றாம் காட்சி

இடம்: *சங்கிலியன் அரசவை வர்ண குலத்தான் உட்பட பலர் இருக்கின்றார்கள் - சங்கிலியின் முகம் கோபத்தால் சிவந்திருக்கின்றது.*

சங்கிலி: "மந்திரி பிரதானிகளே!..."
நாம் ஒரு மாபெரும் போருக்குத் தயாராகும் நேரம் வந்து விட்டது. யாழ்ப்பாணத்திற்குள் பறங்கிப் பட்டாளங்களும் சிங்களக் கூலிப்பட்டாளங்களும் நுழைந்து விட்டன. நாம் எச்சரித்தும் கேளாது பறங்கிகளுக்கு படகுகளை கொடுத்து உதவியிருக்கிறார்கள் சில துரோகிகள்."

மந்திரி: ஆம் மன்னா! நமது மிரட்டலினால் ஒரு சிலர் படகுகளை அனுப்பாதிருந்தும் காக்கை வன்னியனும், சில முதலியார்களும், பாதிரியார்களும் அனுப்பிய படகுகளால் 8 நாட்களுக்குள் அந்நியர் நம் நகரினுள் நுழைந்து விட்டனர்.

தளபதி: உண்மைதான் மன்னா! பறங்கியர் உடனடியாக படையுடன் வரக்காரணம் குஞ்சலி வீரரும் டொம் பீதுறுவும் வந்தது தான் என நினைந்து யாழ்ப்பாண கடலைவிட்டு சற்று எட்ட நிற்குமாறு நாம் பணிந்தோம். அதுவே பறங்கிகளுக்கும் வசதியாகி விட்டது. கடல்மூலமும் படைகளைக் கொண்டு வந்து விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கிலி:** ஆம் தளபதியாரே! தாங்கள் கூறுவது உண்மை தான் இருப்பினும் பறங்கியர் உடனடியாக போரை ஆரம்பிக்கமாட்டார்கள். அவர்கள் நகரினுள் நுழைந்து பல தினங்களாகி விட்டன. ஆனால் அவர்கள் உடனடியாக போரினை தொடங்கவில்லை. அதன் காரணம் என்ன தெரியுமா?

**வருணகுலத்தான்:** ஆம் மன்னா படைகள் உள்நுழைந்ததும் அவர்களுக்கு ஒத்துவராத சூழலாதலால் படையினரில் பலருக்கு நோய் ஏற்றப்பட்டுள்ளதாகவும் படை பலமிழந்து காணப்படுவதாகவும் ஒற்றர்கள் கூறியுள்ளனர். இருப்பினும் நாம் அசட்டையாக இருக்கக்கூடாது. அதனால் நமது படைகளை தயார் நிலையில் வைத்துள்ளேன்.

**சங்கிலி:** "நன்றி! வர்ணகுலத்தாரே நல்ல காரியம் செய்துள்ளீர் தஞ்சை மன்னனுக்கும் உமக்கும் தமிழீழம் என்றென்றும் நன்றியுள்ளதாயிருக்கும்.

**வர்ணகுலத்தான்:** நன்றியெல்லாம் எதற்கு மன்னா! இது எங்கள் கடமை தமிழ் நாட்டிலிருந்து கடல் தாண்டியுள்ள ஒரேயொரு தமிழ் அரசு தமிழீழம் மட்டுமே அது அந்நியருக்கு அடிமைப்படாமல் காப்பது தமிழர்கள் ஒவ்வொருவருடைய கடமை.

**சங்கிலி:** "கடல் தாண்டியிருந்தும் தமிழரசையும் தமிழையும் காக்க நீங்கள் உதவி செய்ய ஓடோடி வந்துள்ளீர்கள். ஆனால் எம்மினத்திலேயே காக்கை வன்னியன் போன்ற சில துரோகிகள் இருப்பது தான் தமிழின வரலாற்றில் காலங்காலமாக ஏற்பட்டு வரும் வடுவாகும்."

**மந்திரி:** கவலை விடுங்கள் மன்னா! கயவரோடு சேர்த்து களைகளையும் கைலாசத்துக்கு அனுப்பி வைப்போம்.

**சங்கிலி:** "கைலாசம் என்றதும் தான் நினைவுக்கு வருகிறது. மந்திரியாரே! பறங்கிப் படைக்கு தலைமை தாங்கி வந்துள்ள ஒலிவேரா என்பவன் நமது ஆலயங்களை அழிப்பதாகவும் அதிலிருந்து பெற்ற கற்களைக் கொண்டு தங்களுக்கு கோட்டைகளையும் தேவாலயங்களையும் அமைப்பதாகவும் கேள்வி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்ணகுலத்தான்: "வேதனைக்குரிய உண்மை இது மன்னரே! பறங்கியர் நமது மக்கள் பிசாசுகளை வணங்குகின்றனரென்றும் அதிலிருந்து மீட்டு அவர்களை பரிசுத்தப் படுத்தவே தாங்கள் வந்துள்ளதாகவும் பிரச்சாரம் செய்கிறார்களாம்."

சங்கிலி: கேவலம்! வியாபாரம் செய்ய வந்த பறங்கியர் எம்மினத்தை தூற்றுவது மட்டுமின்றி தமிழத்தின் அழியாச்சின்னங்களான ஆலயங்கள் மீதே கை வைக்க ஆரம்பித்து விட்டார்கள்.

**(காவலன் உள்ளே வந்து தலைவணங்குகிறான்)**

காவலன்: "மன்னரைக் காண பறங்கிகளின் தூதுவர் ஒருவர் வந்துள்ளார்"

சங்கிலி: (ஆச்சரியத்துடன்)
"அப்படியா? ஆழைத்து வாருங்கள் அவரை"

**(பறங்கித் தூதுவர் உள்ளே வருகிறார்)**

தூதுவர்: "யாழ் மண்ணின் வேந்தனுக்கு அடியேனின் வணக்கங்கள்"

சங்கிலி: (புன்னகையுடன்)
" ஆசனத்தில் அமருங்கள் தூதுவரே"

**(தூதுவர் ஆசனத்தில் அமர்ந்தபின் மன்னனைப் பார்த்துப் பேசுகிறார் )**

தூதுவர்: "ஆகா, எதிரியிடம் கூட இன்முகம் காட்டிப்பேசும் தமிழர்களின் இனிய பண்பு என்னை மெய் சிலர்க்க வைக்கிறது.

சங்கிலி: "அது தமிழினத்தின் உடன் பிறந்தது. தூதுவரே! வுந்த காரியத்தைக் கூறுங்கள்."

மந்திரி: இன்னுமா புரியவில்லை மன்னா! சில தினங்களுக்கு முன்னர் வந்த அதே கோரிக்கைகளோடு மீண்டும் வந்திருப்பார். எத்தனை தடவை வந்தாலும் பறங்கியர் கோரிக்கைக்கு தமிழீழம் இறங்கி வரா. என இன்னும் அவர்களுக்கு விளங்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலி: " இன்னும் மௌனம் ஏன் தூதுவரே!

தூதுவர்: "கூறிவிடுகிறேன் மன்னா! எங்கள் தளபதி முன்னர் விடுத்த வேண்டுகோள்களை தாங்கள் ஏற்க மறுத்து விட்டீர்கள். அதனால் எங்கள் தளபதி அதிருப்தி கொண்டிருக்கிறார்."

சங்கிலி: "வேண்டுகோள்களா? அவை.
தமிழினத்தின் சினத்தைத் தூண்டும் தூண்டு கோல்கள்"

தூதுவர்: கோபம் வேண்டாம் மன்னா! இதில் கோபப்படுவதற்கு எதுவுமே இல்லை. இது வழக்கமாக நடப்பது தானே. திறை கொடுக்குமாறு தளபதி கோரிக்கை விடுத்தார்.

சங்கிலி: "திறை....யாருக்கு கொடுக்க வேண்டும். எதற்காக கொடுக்க வேண்டும். சன்மானம் என்ற பேரில் எங்கள் முன்னோர் விரும்பிக் கொடுத்ததை பகைவர் வலிந்து கேட்டு கொடுப்பதற்கு தாழ்ந்து விடவில்லை தமிழர் பொறை. எங்கள் போர்ப்பறை கேட்டு ஒளிந்து கொள்ளும் சிங்களக் கூலிப்படைகளோடு வந்து திறை கேட்பது தான் பறங்கியர் மறையோ?... இல்லை அதுதான் முறையோ?...

தூதுவர்: "வார்த்தை ஜாலங்கள் வேண்டாம் மன்னா! தமிழர் பொறை தாழ்ந்து விடவில்லை தான். ஆனால் வீழ்ந்து விட்டது. காக்கை வன்னியன் போன்ற தாய்மண்ணை காட்டிக் கொடுக்கத்தயங்காத துரோகிகள் வெட்டிய குழியில் விழுந்து விட்டது."

வர்ணகுலத்தான்: "தூதுவரே! வீண் பேச்சுக்கள் வேண்டாம். வந்த காரியத்தை மட்டும் கூறுங்கள்."

தூதுவர்: (புன்முறுவலுடன்)
யார் வர்ணகுலத்தவரா! சினம் கொள்ளாதீர். உங்கள் இனம் பற்றிப் பேசினால் சினம் கொள்ளாதீர்."

மந்திரி: "தூதுவர் பேச்சில் தலைக்கனம் தெரிகிறது. கணப்பொழுதில் காணாமல் போய்விடுவீர், வந்ததை மட்டும் கவனியும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கிலி:* அமைதியாயிருங்கள் மந்திரியாரே! தூதுவர் வெறும் அம்புதான் ஏவியவன் இருக்க அம்பை நோவானேன்.

*தூதுவர்:* மீண்டும் ஒரு முறை மெய்சிலிர்க்கிறேன் மன்னா! உங்களது நற்பண்பு காணும் போது உங்களுடன் போர் புரிவதில் எமக்கும் வருத்தம்தான். இப்போது கூட எதுவும் கெட்டுவிடவில்லை. இந்தப்போரைத் தவிர்க்க விரும்பினால், எங்கள் தளபதியின் இரு கோரிக்கைகளையும் நிறைவு செய்யுங்கள். திறையை செலுத்துங்கள். வருணகுலத்தாரையும் வீரர்களையும் சரணடைய உத்தரவுவிடுங்கள்.

*(இது கேட்டதும் தளபதி தனது வாளை உருவிக் கொண்டு எழுகிறான்)*

சங்கிலி: ஆவேசம் வேண்டாம் தளபதியாரே! உருவிய வாளை உறையிலிடுங்கள். பார்த்தீரா தூதுவரே! திறை பற்றியோ சரணடைதல் பற்றியோ பேசினாலே உறையில் இருக்கும் வாள் கூட சீறுகிறது. அது உம் கூற்றனாகுமுன் உமது வரவுக்கான சேதியை அறியத்தாரும்.

வர்ணகுலத்தான்: வர்ணகுலத்தான் தமிழர்க்கு துணையாக வந்தவன். பிணமாகி வீழ்வானே தவிர பணயமாக செல்லமாட்டான். அதனை பறங்கியர் தெரிந்து கொள்ள வேண்டும்.

*சங்கிலி:* தூதுவரே! உங்கள் தளபதியிடம் கூறுங்கள். திறை என்ற பேச்சுக்கு இடமேயில்லை. வர்ணகுலத்தார் எமக்கு உதவ வந்தவர். அவருக்கு உபத்திரவம் கொடுக்க தமிழீழத்தவர் தரம் கெட்டவர் அல்ல. இன்னுமொரு தரம் இதுபற்றி பேசினால் பறங்கியர் தடம் காணாது போய்விடுவர். வர்ணகுலத்தார் வந்த காரியம் முடிந்ததும் தஞ்சை செல்வார். அதுவரை அவர் இங்குதான் இருப்பார்.

*வர்ணகுலத்தான்:* இனியும் பேச்சு நீடிப்பது உமக்கு உகந்ததல்ல தூதுவரே! தாமதிக்காமல் இப்போது தூது வந்திருப்பதன் காரணத்தை கூறுங்கள்.

*தூதுவர்:* கூறி விடுகிறேன்! மன்னரே எமது தளபதியின் கோரிக்கை இதுதான். எமது இரு கோரிக்கைகளையும் நிராகரித்தது குறித்து எமக்கு மிகுந்த கவலை. இக்கோரிக்கையை நிராகரிக்க மாட்டீர்கள் என நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது படைக்குரிய பொருட்கள் தீர்ந்து கொண்டு வருகின்றன. பொருட்களை பெறுவதற்கு தேவையான காசுகளை தந்துதவ வேண்டும். இதுதான் எமது தளபதி விடுத்த வேண்டுகோள்.

*மந்திரி*: திறை கேட்டுக்கிடைக்காததால் உதவியென்று கேட்கிறீரோ?

*சங்கிலி*: தூதுவரே உதவி கேட்பது விரோதியாயினும் தேடிச்சென்று உதவுவது தமிழர் பண்பு இருப்பினும் எமது மக்கள் நலன் கருதி. இந்த உதவியை ஓர் நிபந்தனையின் பேரில் செய்கிறோம்.

*தூதுவர்*: நிபந்தனையா! பரவாயில்லை கூறுங்கள். இப்போது எங்கள் நிலை எதையும் ஏற்கத் தயாராயுள்ளது.

*சங்கிலி*: பொருட்களை பெற்றுக்கொண்டதும் நகரிலுள்ள அனைத்து பறங்கிப்படைகளும் சிங்களப்படைகளும் பூநகரிக்குப் பின்வாங்கி விட வேண்டும். இதற்கு ஒப்புக்கொண்டால் உதவி கிட்டும்! இல்லை தமிழர் படை போர்முரசு கொட்டும்.

*தூதுவர்*: பரிசீலிக்க வேண்டிய நிபந்தனை! இருப்பினும் எங்கள் நன்மை கருதி ஒப்புக்கொள்கிறேன். இதற்கு தளபதியை எவ்வாறாவது சம்மதிக்க வைக்கிறேன்.

வர்ணகுலத்தான்: (புன்னகையுடன்)
“உபதளபதி தாங்கள் கூறினால் தளபதி ஒப்புக்கொள்ளாமலா இருப்பார்.

*தூதுவர்*: (அதிர்ச்சியுடன்) “உபதளபதியா?....என்ன சொல்கிறீர்....”
:
*சங்கிலி*: “ஆமாம் தெயிக்சேறா தாங்கள் யாரென்று எமக்கு முன்னமே தெரியும். தமிழர் கால்பட்ட மண்ணுக்கு கூட விவேகம் உண்டு. அப்படியிருக்கையில் எமக்கு இல்லாமலிருக்குமா?”

(சங்கிலி சைகை செய்ய பணிப்பெண் ஒருத்தி ஏந்தி வந்த தட்டிலிருந்து 3பணமுடிப்புக்களை எடுத்து உபதளபதி கையில் கொடுக்கிறான் சங்கிலி)

*(திரை மூடுகிறது)*

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களப்பின்னணி

சங்கிலி தமிழர் பண்பைக் காட்டுமுகமாக எதிரியென்றும் பாராது 5000 பகோடாக்களை கொடுத்து உதவினான். ஆனால் ஒலிவேரா சொன்ன சொல்லைக் காப்பாற்றவில்லை. பணத்தை வாங்கிய பின் பூநகரிக்குப் பின்வாங்கவில்லை. தமிழ் ஈழ அரசின் துரோகிகளின் உதவியுடன் தொடர்ந்தும் குடாநாட்டிலே தங்கினான். படைகளுடன் வண்ணார் பண்ணையை நோக்கி முன்னேறினான்.

தமிழர்களோடு ஒப்பந்தங்கள் செய்பவர்கள் தமிழர்களை எப்போதும் ஏமாற்றியே உள்ளார்கள். மாற்றானையும் நம்பும் பண்பு தமிழரில் மேலதிகமாக உண்டு. இதனால் தமிழர்களை ஏமாற்றுவது எளிதாக இருந்தது. தமிழர்கள் தம் சொல்லைக் காப்பாற்றியுள்ளார்கள். ஆனால் எதிரிகள்....

# நான்காம் காட்சி

*இடம்: சங்கிலி மன்னன் அரசவை*
***வர்ணகுலத்தான் சங்கிலி மந்திரி தளபதிகள் வீற்றிருக்கின்றனர்.***

***தளபதி:*** ஏமாற்றி விட்டார்கள் மன்னா! பறங்கியர் கொடுத்த வாக்கை மீறி பூநகரிக்குப் பின்வாங்காது. ஒலிவேரா வண்ணார் பண்ணையை நோக்கி படையுடன் வந்து கொண்டிருக்கிறான்.

***சங்கிலி:*** என்ன செய்வது தளபதியாரே! நம்பிக் கையைக்கொடுப்பது தமிழர் பண்பு. நம்பிக்கையைக் கொடுப்பது அந்நியர் பண்புபோலும் நெடுங்காலமாக தமிழர்கள் இவ்வாறு நம்பிக்கெடுவதே வாடிக்கையாகி விட்டது.

***வர்ணகுலத்தான்:*** "வீரக்களை சொட்டும் மன்னர் பேச்சில் இன்று விரக்தி தென்படுவது மனதுக்கு வருத்தத்தை அளிக்கிறது. இனி நாமும் படைகளை தயார் செய்யவேண்டியதுதான் மன்னா"

***சங்கிலி:*** "ஆமாம்! வருணகுலத்தாரே, வீரமாகாளியம்மன் காத்து நிற்கும் வீரம் விளைந்த பூமி இது. பாவிகளின் இரத்தம் பட்டுக் கறைபட வேண்டாம். நமது படைகள் வண்ணார்பண்ணை நோக்கிச் செல்லட்டும். டொம் பீதுறுவுக்கு செய்தி அனுப்புங்கள். கடல் வழியாக வரும் பறங்கிகளை அவன் பார்த்துக்கொள்வான். சிங்களக் கூலிப்படைகளை வருணகுலத்தார் எதிர்கொள்ளட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோசக்கார பறங்கியரை நானே எதிர்கொள்கிறேன். மந்திரியாரே! உடனடியாக போர் முரசு கொட்டட்டும், துடித்துக் கொண்டிருக்கும் நம் வீரர்களது வாளுக்கும் வேலுக்கும் வேலை கொடுப்போம்"

*மந்திரி:* (மகிழ்வுடன்) "அப்படியே ஆகட்டும் மன்னா!"

*(திரை மூடுகிறது).*

....

# ஐந்தாம் காட்சி

வீரமாகாளிம்மன் சந்நிதி முன்னால் போருடை தரித்து சங்கிலி, வருணகுலத்தான் ஏனைய தளபதிகள், மந்திரி போன்றோர் நெற்றியில் வீரத்திலகமிட்டு கண்களை மூடி அம்மனை தியானித்த வண்ணம் உள்ளனர். தீபாராதனையை முடித்த பூசகர் அம்மன் பாதத்தில் வைக்கப்பட்டிருந்த சங்கிலியின் ராஜவாளை பயபத்தியுடன் எடுத்து வந்து சங்கிலியின் கரங்களில் கொடுக்கிறார்.

*சங்கிலி:* தமிழீழத்தைக் காத்து நிற்கும் அன்னை வீரமாகாளியே! உன் முன்னே இவ்வீரவாளின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன் இவ்வாள் எனது கையிலுள்ளவரை அந்நியர் பாதம் இம்மண்ணில் நிலைக்க விடமாட்டேன்.

*பூசகர்:* அம்பாள் அருள் உமக்கு என்றுமுண்டு மன்னா சகலமும் ஜெயமாகும்.

*சங்கிலி:* நன்றி பூசகரே! இன்று ஆரம்பமாகவுள்ள போர் தமிழரது உரிமைப்போர் சொந்த மண்ணைக் காக்கும் போர். இப்போரில் சங்கிலி வீழ நேரிடலாம். ஆனால் தமிழுணர்வும் தாய்நாட்டுப் பற்றும் என்றென்றும் வீழாதிருக்க அன்னை துணையிருக்க வேண்டும்.

*வருணகுலத்தான்:* சஞ்சலம் வேண்டாம் மன்னா! எமது கையில் வாளும் நெஞ்சில் வலியும் உள்ளவரை எமது இறுதி மூச்சுவரை நம் தமிழ் மண்ணை அந்நியரிடமிருந்து காக்கப் போராடுவோம்.

*(திரை மூடுகிறது)*

....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களப்பின்னணி

வண்ணார்பண்ணை போர்க்களமானது முதலில் சிங்களக் கூலிப்படைகள் வந்தன. இவற்றை சங்கிலி மன்னனின் படைகள் சந்தித்தன. சிங்களப் படைகளை புறமுதுகு காணச் செய்தன. போரின் வேகம் அதிகரிக்க அதிகரிக்க சங்கிலி வெற்றி பெறுவது சாத்தியமாவது போல் அமைந்தது.

போரின் நிலை குறித்து தஞ்சை மன்னனுக்கும் கண்டி மன்னனுக்கும் சங்கிலி செய்தி அனுப்பினான். கண்டி மன்னன் எவ்வித உதவியும் வழங்கவில்லை. ஒல்லாந்தப் படைகள் எந்நேரமும் வரலாம் என எதிர்பார்த்தான். டொம் பீதுறுவின் கடற்படை வருவதற்குரிய காலம் இதுவெனச் செய்தி அனுப்பினான். புறமுதுகு காட்டி ஓடும் சிங்களக் கூலிப்படைகளை கண்டு ஒலிவேரா துணுக்குற்றான். மன்னாரில் இருந்த கடற்படைக்குச் செய்தி அனுப்பினான். நாகப்பட்டினத்துக்கும் கொழும்புக்கும் செய்திகள் அனுப்பினான்.

ஊர்காவற்றுறையில் இருந்து கொண்டே சில போர்த்துக்கேய படைத்தலைவர்கள் காக்கை வன்னியனுடன் கதைத்தனர். தந்திரோபாயங்களை செய்தனர். நேரடிப் போரில் சங்கிலி மன்னை வெல்ல முடியாது. போரின் கால எல்லையும் நீடிக்கும். சங்கிலி மன்னனைச் சிறைப்பிடித்தால் தமிழர் படை சீர்குலைந்து விடும். இவ்வாறு திட்டம் போட்டனர். காக்கை வன்னியனை இத்திட்டத்தில் ஈடுபடச்செய்தனர். சங்கிலி மன்னன் சிறை பிடிக்கப்பட்டால் காக்கை வன்னியனைப் போர்த்துக்கேய அரசின் கீழுள்ள தமிழ் ஈழ அரசின் ஆட்சித்தலைவன் ஆக்குவதாகக் கூறினார்கள்.

காக்கை வன்னியன் துரோகம் செய்ய முற்பட்டான். தனது இனத்தை விற்க முன்வந்தான். தனது நன்மைக்காகத் தமிழினத்தை, அதன் தன்மானத்தலைவனை விற்க முன்வந்தான். தமிழீழ அரசைக் கலைத்து நாட்டை அடிமை நாடாக்க ஒப்புக் கொண்டான். தமிழர்களுக்குத் துரோகிகள் தமிழர்களிடையே இருந்தமையால் தான் தமிழர்கள் அடிமை வாழ்வு வாழ நேரிட்டது. இது வரலாற்று உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாம் காட்சி

*சங்கிலி வீரர்களுடன் பாசறை அமைத்து இருந்தான். பாசறையைச் சுற்றிலும் வீரர்கள் காணப்படுகின்றனர். சங்கிலி ஓர் பாசறையின் மீது அமர்ந்து தனது வாளினை கூர்மை பார்த்துக் கொண்டு இருந்தான். அப்போது ஒரு வீரன் அங்கு வருகிறான்.*

*சங்கிலி:* "என்னவாயிற்று வீரரே! எதற்காக இவ்வளவு பதட்டம்."

*வீரன்:* "மன்னா! அவசரமான ஆச்சரியத்திற்குரிய செய்தி ஒன்று"

*சங்கிலி:* என்ன செய்தி விரைவாகக் கூறு.

*வீரன்:* மன்னா! அந்நியருடன் இணைந்து சதியில் ஈடுபட்ட காக்கை வன்னியனை காரியம் முடிந்ததும். பறங்கியர் துரத்திவிட்டனராம். அவர்களை பழிவாங்க தங்களுடன் இணைந்து கொள்ள விரும்புவதாக வந்த காக்கை வன்னியனையும் அவரது வீரர்களையும் நமது வீரர்கள் தடுத்து வைத்துள்ளனர்.

*சங்கிலி:* அப்படியா! உடனடியாக காக்கை வன்னியனை அழைத்து வாருங்கள்.

*(வீரன் சென்றதும் சில வீரர்கள் காக்கை வன்னியனையும் அவனது வீரர்களையும் வாள் முனையில் அழைத்து வருகின்றனர். தலை குனிந்து நின்றான் காக்கை வன்னியன்.)*

*சங்கிலி:* காக்கை வன்னியா! எதற்காக தலை குனிந்து நிற்கிறாய். தமிழினம் தலை நிமிர்ந்து வாழத்தானே நாங்கள் வாளேந்தி போரிட்டுக் கொண்டிருக்கின்றோம்.

*காக்கை வன்னியன்:* (கண் கலங்கியபடி)
இத்தகைய தமிழினத்தவர்க்கு தமிழனான நானே தலை குனிவை ஏற்படுத்த முனைந்தேனே என்னை மன்னித்து விடுங்கள் மன்னா!

*வீரனொருவன்:* "குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும் மன்னா! இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கும் என எமக்கு சந்தேகமாய் இருக்கிறது இவர்களை நம்ப வேண்டாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*காக்கை வன்னியன்:* வீரனே! உனது கோபம் நியாயமானதே. தாய் மண்ணை எதிரிகளுக்கு விற்க முனைந்த பாவி நான். அந்நியரின் ஆசை வார்த்தைகளை நம்பி ஏமார்ந்து போனேன். அவர்கள் தங்கள் தேவை முடிந்ததும் என்னை ஒழிக்க திட்டமிட்டார்கள். ஆதலால் அவர்களிடம் இருந்து விலகி வந்து விட்டேன்.

*வீரன்:* தாய் மண்ணிடம் விசுவாசமில்லாது நடந்து கொள்ளும் உம்போன்றவர்க்கு எதிரிகள் தான் தக்க தண்டனை தரவேண்டியவர்கள்.

*காக்கை வன்னியன்:* வீரனே! வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சாதே. நான் என் மண்ணிற்கும் இனத்திற்கும் செய்த துரோகத்திற்கு மன்னர் கையினால் மரிப்பது தான் பிராயச்சித்தமாகும். மன்னா! எதற்கும் யோசிக்க வேண்டாம். சொந்த இனத்தை காட்டிக் கொடுக்கத் துணிந்த பாவி நான். என்னை உங்கள் கரங்களினாலேயே கொன்று விடுங்கள்.

*(தனது இடையிலிருந்த வாளை உருவி சங்கிலியின் காலடியில் போட்டு விட்டு நிலத்தினில் மண்டியிட்டு அமர்கிறான். சங்கிலி வீரர்களைப் பார்த்து சைகை செய்ய அவர்கள் அவ்விடத்தை விட்டு நகருகின்றனர். காக்கை வன்னியன் இன்னும் கண்ணீருடன் மண்டியிட்டவாறே காட்சியளித்தான். இது சங்கிலியின் மனதை உருக்கியது)*

*சங்கிலி:* எழுந்திரு காக்கை வன்னியா நீ மனம் திருந்தியதே எனக்கு புதுபலம் கிடைத்த மாதிரி இருக்கிறது. எதற்காக மன்னிப்பு. நடந்தவற்றை மறப்போம். நம் பற்றுக்களைத் துறப்போம். எதிரிகளை இம்மண்ணிலிருந்து விரட்டி விடுவோம். இல்லையானால் இறுதி வரை போரிட்டு செத்து மடிவோம்.

*(சங்கிலி குனிந்து காக்கை வன்னியனின் வாளைக் கையில் எடுக்கிறான். மற்றொரு கையினால் மண்டியிட்ட வண்ணம் இருந்த காக்கை வன்னியனை எழுப்புகிறான். காக்கை வன்னியனது வாளை அவனது உறையிலிடுகிறான்.)*

*காக்கை:* "உனக்கு எவ்வளவு பெரிய மனது நண்பா"

*(கண்ணீர் சிந்துகின்ற காக்கை வன்னியனை மகிழ்வோடு தன் மார்புடன் சேர்த்து அணைத்துக் கொள்கிறான். காக்கை வன்னியனின் பிடி இறுகுகிறது. சங்கிலியை அசைய விடாமல் இறுக்கி பிடித்துக்கொண்டான். காக்கையின் சூழ்ச்சி சங்கிலிக்கு*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இப்போது தான் புரிந்தது. அவனை உதறி தள்ளிவிட்டு தனது வாளை எடுக்க முனைகையில் காக்கை வன்னியனுடன் வந்திருந்த பகைவர்கள் தங்கள் ஆடைகளுள் மறைத்து வைத்திருந்த வாள்களை உருவி சங்கிலியை சுற்றி வளைக்கின்றனர். சங்கிலி சுதாகரிப்பதற்கிடையில் காக்கை வன்னியன் சங்கிலியால் சங்கிலி மன்னனின் கைகளை பிணைக்கிறான். வாள் முனையில் எதிரிகளின் நடுவே அகப்பட்டான் சங்கிலி.)*

*சங்கிலி:* "சங்கிலியை அன்பு சங்கிலிக்குள் கொண்டு வந்து இரும்புச் சங்கிலியால் பிணைத்து விட்டாய் காக்கை வன்னியா மாபெரும் தவறினை தமிழினத்திற்கு நீ இழைத்து விட்டாய். பறங்கியர் பக்கம் சேர்ந்து நீயும் பேடியாகி விட்டாயா?"

*காக்கை:* "வாயை மூடு! நீ இப்போது எனது கைதி"

*சங்கிலி:* "கைதியா? சங்கிலி கைதியா கைகளைச் சங்கிலியால் கட்டிவிட்டால் சங்கிலி கைதியாகி விடுவானா துரோகியே உங்களை ஒழிக்கும் வரை என்னை ஒடுக்க முடியாதடா."

*(எதிரே நின்ற காக்கை வன்னியனை மார்பில் எட்டி உதைக்கிறான். சங்கிலி அடிபட்டு கீழே விழுந்த காக்கை வன்னியன் வாளை உருவிக்கொண்டு சங்கிலியை குத்த வருகிறான். சங்கிலிக்கு அருகே வந்து வாளை ஓங்குகையில் காக்கை வன்னியனின் வீரனொருவன் சங்கிலியின் முன்னே வருகிறான்.)*

*வீரன்:* காக்கை வன்னியரே! வாளை தாழ்த்துங்கள். கையோங்கியதற்காக மன்னரிடம் மன்னிப்புக் கேளுங்கள்.

*காக்கை:* துரோகி! என்ன சொல்கிறாய் இவனிடம் நான் மன்னிப்பு கேட்பதா?....

*வீரன்:* மன்னருக்கு எவ்வித தீங்கும் நோராது பாதுகாப்பாக கொண்டு வரும்படி எங்களுக்கு தளபதி ஒலிவேரா உத்தரவிட்டிருக்கிறார். அதனை மீறினால் உம்மையும் கைது செய்ய நேரிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*சங்கிலி:* (சிரித்த வண்ணம்)
"கேட்டாயா காக்கை வன்னியா! உனது வீரனது பேச்சை உனக்குக் கீழே உன்னுடன் இருந்ததால் தாய் மண்ணின் மீதுதான் இவர்களுக்கு விசுவாசம் இல்லையென்று நினைத்தேன். இப்போது தான் புரிகிறது தலைவனான உன்னிடம் கூட விசுவாசம் இல்லையென்று."

*வீரன்:* "மன்னரே! வீண் பேச்சு வேண்டாம். ம்......நடவுங்கள்.

*குரல்:* " மன்னர் நடப்பது முதலில் இருக்கட்டும். இங்கே நடக்கப்போவதை நீங்கள் பாருங்கள்."

*(திடீரென அங்கே சங்கிலியின் தளபதி வருகிறான். தளபதி வாளினை உருவிக்கொண்டு காக்கை வன்னியனோடு சண்டையிடுகிறான். தளபதி எதிர்பாரா வண்ணம் காக்கை வன்னியனின் வீரனொருவன் தளபதியின் முதுகில் குத்துகிறான்.)*

*தளபதி:* 'கோழையே! பின்னாலிருந்து குத்தி தமிழினத்திற்கு இழுக்கை ஏற்படுத்தாதே. இதோ என் மார்பில் குத்தடா"

*(பின்னால் இருந்து குத்திய வீரனை தளபதி ஆவேசத்துடன் வெட்டிச்சாய்க்கிறான். இதைப் பயன்படுத்திக் கொண்ட காக்கை தனது வாளால் தளபதியின் வயிற்றில் குத்துகிறான்.)*

*சங்கிலி:* "காக்கை வன்னியா! தமிழர் படையின் தளபதியை சதியினால் வீழ்த்தி விட்டாயடா. பேடிபோல் என்னை கட்டி வைப்பதை விடுத்து அவிழ்த்து விடடா அழித்து விடுகிறேன் உங்களை."

*தளபதி:* கவலை வேண்டாம் மன்னா! காக்கை வன்னியர் மார்பில் என்னை குத்தி எனக்கு வீர மரணத்தை ஏற்படுத்திக் கொடுத்து விட்டார்.

*(தளபதி தரையில் சாய்கிறான். இதனைக்கண்ட சங்கிலி திமிறுகிறான். வீரனொருவன் தனது வாளின் பிடியினால் சங்கிலியின் தலையில் அடிக்க சங்கிலி மயங்குகிறான்.)*

*காக்கை:* "இனியும் தாமதிப்பது ஆபத்தானது. மன்னனை இழுத்து வாருங்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வீரனொருவன் தனது வாளை உறையிலிட்டு விட்டு மன்னனை தூக்கி தோளில் போட்டுக் கொண்டு செல்கிறான்.)

*(திரை மூடுகிறது)*

....

# களப்பின்னணி

சங்கிலி கைது செய்யப்பட்ட பின்னர் யாழ்ப்பாணம் போர்த்துக்கேயரால் கைப்பற்றப்படுகிறது. சங்கிலியையும் அவனது இரு மருமக்களையும் டி மோத்தா என்ற தளபதி கொழும்புக்கு அழைத்துச் செல்கிறான். கொழும்பிலிருந்து கோவாவுக்கு கொண்டு செல்லப்பட்ட சங்கிலி 1921ம் ஆண்டு தூக்கிலிடப்பட்டான். யாழ்ப்பாணத்துக்கு ஒலிவேரா ஆட்சித் தலைவனான். கோயில்களை இடித்தான். இதில் நல்லூர் கந்தசுவாமி கோயிலும் அடங்கும். கோவிலை இடித்த கற்களைக் கொண்டு தேவாலயங்களையும் கோட்டைகளையும் கட்டினான்.

1619க்கும் 1621க்கும் இடைப்பட்ட இரு ஆண்டுகளில் போர்த்துக்கேயருக்கு எதிராக பல தமிழ் வீரர்கள் கிளர்ச்சி செய்தனர். அவர்கள் பறங்கியரால் கொல்லப்பட்டனர். தஞ்சைப்படை வீரர்களும் வருணகுலத்தானும் சங்கிலியின் மகள் ஞானவல்லியும் யாழ்ப்பாணக் காடுகளில் மறைந்து வாழ்ந்து பறங்கியருக்கு எதிராக செயற்பட்டு வந்தனர். ஆனால் தோல்வியே அடைந்தனர். இறுதியாக தஞ்சை வீரர்களின் வேண்டுகோளின்படி ஞானவல்லியையும் அழைத்துக் கொண்டு தஞ்சைக்குச் செல்ல முடிவு செய்கிறான்.

# ஏழாம் காட்சி

*ஒரு பாசறையில் வருணகுலத்தான் அமர்ந்திருக்கிறான். அவனுக்கு பின்னே ஞானவல்லி வருகிறாள்.*

*ஞானவல்லி:* "தளபதியார்! ஆழ்ந்த சிந்தனையிலிருக்கிறார் போல் தெரிகிறது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வருணகுலத்தான்*: ஆம்....ஞானா மன்னரையும் தூக்கிலிட்டு விட்டார்கள். நாமும் கடந்த இரண்டு ஆண்டுகளாக பறங்கியரை துரத்த பல முயற்சிகளை மேற்கொண்டும் முடியவில்லை. வீரர்கள் வேறு தஞ்சைக்குச் செல்ல விரும்புகிறார்கள்.

*ஞானவல்லி*: அவர்கள் சொல்வது சரிதானே!
இம்மண்ணில் பிறந்தோரே இதனை அந்நியருக்கு விற்றுவிட்டனர். அவர்களும் எத்தனை நாள் இந்தக்காட்டில் இருந்து கஷ்டப்படுவர். தாய் பூமியைக்காண அவர்களுக்கும் ஆசையிருக்காதா?

*வருணகுலத்தான்*: உண்மைதான் ஞானா நாம் தஞ்சை சென்றதும் மன்னர் முன்னிலையில் நமது திருமணத்தை நடத்த ஏற்பாடு நடக்கிறது. ஆனால் நம்மிடமுள்ள மன்னரின் ராஜவாளை என்ன செய்வதென்று தான் புரியவில்லை.

*ஞானவல்லி:* ராஜவாள்!....
வீரமாகாளியம்மன் முன்னிலையில் தந்தை சபதம் எடுத்துக் கையிலெடுத்தார். ஆனால் துரோகிகள் அவரைச் சூழ்ந்த போது அந்த வாள் அவர் கையில் இருந்திருந்தால் இத்தனையும் நடந்திருக்குமா?.....

*வருணகுலத்தான்*: வீரமாகாளியம்மன் என்றதும் தான் ஒரு யோசனை தோன்றுகிறது. ஞானா மன்னரின் வாள் இருக்க வேண்டிய இடம் அம்மன் பாதம் தான். அந்நியர் பாதம்பட்ட இம்மண்ணை அந்நியர் கையிலிருந்து மீட்க அம்மன் பாதத்திலுள்ள ராஜவாளை கையிலெடுக்க தமிழினம் முன்வரும் காலம் வரும்வரை இவ்வாள் அம்மன் பாதத்திலேயே இருக்கட்டும்.

*(திரை மூடுகிறது)*

....

# எட்டாம் காட்சி

*வருணகுலத்தானும் சில வீரர்களும் கூத்தாடிகள் வேடமணிந்து வீரமாகாளியம்மன் கோவிலுக்கு வருகிறார்கள். அங்கு நின்றிருந்த பூசகரிடம் மறைத்து வைத்திருந்த ராஜவாளை வருணகுலத்தான் கொடுக்கிறான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வருணகுலத்தான்*: "ஐயா! இதனை அம்மன் பாதத்தில் வைத்து விடுங்கள்.

*பூசகர்:* "இது.... இது ராஜவாளல்லவா?
இது எப்படி ... நீங்கள் யார்?..."

*வருணகுலத்தான்*: "நான் தான் தஞ்சைப்படைத்தலைவன். நாங்கள் தஞ்சைக்குச் செல்ல முடிவெடுத்துள்ளோம். அதனால் மன்னரது ராஜவாளை அம்மன் பாதத்தில் வைத்துவிட்டுச் செல்லவே வந்தோம். இனி இந்த மண்ணை மீட்டெடுக்கும் பொறுப்பு, அன்னை வீரமாகாளியுடையது"

*(பூசகர் ராஜவாளை வாங்கிச் சென்று, அன்னையின் பாதத்தில் வைத்துவிட்டு ஓர் தட்டை ஏந்தி வருகிறார்)*

*பூசகர்*: "குங்குமம் வைத்துக் கொள்ளுங்கள் தளபதியாரே! இம்மண்ணை விட்டுச் செல்லப்போகிறீர்கள். மீண்டும் வருவீர்களா?"

*வருணகுலத்தான்*: : "வருவோம், தமிழீழத்தை மீட்கத் துடிக்கும் ஒவ்வொரு தமிழனுக்கும் எங்கள் நாடும் தமிழ் மக்களும் என்றென்றும் துணை நிற்போம். நாங்கள் சென்று வருகிறோம் ஐயா"

*பூசகர்*: "அன்னை உங்களுக்கு துணையிருப்பாள் சென்று வாருங்கள்"

*(வருணகுலத்தானும் வீரர்களும் அம்மன் சந்நிதியை விட்டு வெளியில் வருகின்றனர். ஆனால், அவர்கள் இங்கு வந்தது பறங்கியருக்கு எவ்வாறு தெரிந்ததென்றே தெரியவில்லை. அவர்கள், தஞ்சை வீரர்களை சுற்றி வளைத்தனர். வருணகுலத்தான் வாளை உருவினான். தஞ்சை வீரர்களும் வாளை ஏந்தினர். பறங்கியருக்கும் தஞ்சை வீரர்களுக்கும் ஒரு குட்டிப்போரே நடந்தது. பறங்கி வீரர்களால், தஞ்சை வீரர்கள் கொல்லப்பட்டனர். இறுதிவரை தனி ஒருவனாக நின்று போரிட்ட வருணகுலத்தானை சுற்றிலும் உடல்பூராவும் எதிரிகளின் வாள் முனைகள் புகுந்தன. பறங்கியரின் வாள்கள் நான்கைந்து ஒரே*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நேரத்தில் உடலில் ஏறியதால் வருணகுலத்தான் நிலைகுலைந்து மண்ணில் வீழ்ந்தான்.)*

*பறங்கி வீரன்:* "முடிந்தது தொல்லை. இரண்டு வருடங்களாக நம்மை நடுங்க வைத்த மாவீரன் வீழ்ந்து விட்டான். அவனது தலையை வெட்டி எடுங்கள். தளபதிக்குப் பரிசளிப்போம்."

*(திரை மூடுகிறது)*

....

# ஒன்பதாம் காட்சி

*தளபதி ஒலிவேராவும் கொன்ஸ்டான்டின் டி சாவும் உபதளபதி தெயிக்சேறாவும் இறுதிவரை போரிட்டு மடிந்த மாவீரனின் தலையைக் கண்டு வியந்தனர்.*

*ஒலிவேரா:* " என்ன ஒரு கம்பீரம், இரண்டாண்டுகள் எம்மை நடுங்கவைத்த மாவீரன் இவன். இறந்த பின்னும் அதே கம்பீரத்தோடு தெரிகிறான்"

*கொன்ஸ்டான்டின் டி சா:* "என்ன செய்வது மேஜர்! நமது மேலிடத்து உத்தரவு அப்படி. மண்ணிற்காக மரணமடைந்த மாவீரர்களில் இவனும் ஒருவன். ஆனால், இவர்களது வரலாற்றினை படிக்கும் வரும் தலைமுறையினர் மனதில் நம் போன்றவர்களுக்கு ஓர் நெல்லளவாயினும் இடம் கிடைக்காது. மண்ணில் இடம்பிடித்து வென்றுவிட்டோம். ஆனால் மக்கள் மனதில் இடம்பிடிக்காது தோற்றுவிட்டோம்"

*(திரை மூடுகிறது)*

....

*(குறிப்பு: களப்பின்னணி எனும் தலைப்பின் கீழ் இடம்பெறும் பல தகவல்கள் அமரர். மு.திருச்செல்வம் அவர்களின் 'ஈழத்தமிழர் இறைமை' எனும் நூலிலிருந்து நன்றியுடன் எடுத்தாளப்பட்டுள்ளன.)*

2001.10.24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org